2nd March 1961]

THE HON. SRI P. KAKKAN : அதுபற்றித்தான் இப்பொழுது சொன்னேன். அதை உயர்த்துவது பற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிற்பாடுதான் எங்கே, எந்த ஜில்லாவிற்கு எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கொடுக்கப்படும் என்ற ஒரு முடிவு எடுத்துக்கொள்ள முடியும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : மேட்டூர் அணை கட்டுவதற்கு முன்னால் வண்டல் எல்லாம் வந்துகொண்டிருந்தது. இப்பொழுது வண்டல் இல்லாத காரணத்தினால் தஞ்சை ஜில்லா ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் வண்டல் வருவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

(பதில் இல்லை.)

SRI S. RAMALINGA PADAYACHI : மேட்டூர் அணை கீழே இருக்கிறது, மைசூர் அணை மேலே இருக்கிறது. இந்த மேட்டூர் அணையின் 'கபாஸிடியை' அதிகரிப்பதற்கு மைசூர் அரசாங்கத்திற்கு என்ன தடை இருக்கிறது? ஏன் அவ்வாறு செய்யக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தடை ஒன்றும் இல்லை. ஏற்கனவே நாம் ஒரு முடிவு செய்திருக்கிறோம். அந்த முடிவினை எப்பொழுதும் நிறைவேற்றுவதற்கு சித்தமாய் இருக்கிறோம். ஒருவேளை வண்டல் அதிகமாகப் படிந்து நமக்கு வேண்டிய தண்ணீர் இல்லாமல் போனால், அப்பொழுது உயர்த்துவது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

SRI R. SRINIVASA IYER : சாத்தனூர் அணைக்கட்டில் 20 அடிக்கு உயர்த்துவது என்பது இல்லை. அதிலே இரண்டு 'ஷட்டர்ஸ்' 20 அடிக்கு போடக்கூடிய ஸிஸ்டம் இருக்கிறது. அந்த 'கேட்' வேலை நடந்துகொண்டிருக்கிறது என்று எஸ்டிமேட் கமிட்டி அங்கே போன காலத்தில் சொன்னார்கள். அந்த 'கேட்' வேலை நடந்து பூர்த்தியாகிவிட்டதா என்பதைக் கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அது பொறுத்தப்பட்ட பிற்பாடுதான் 20 அடி உயர்த்த முடியும். அது சம்பந்தமாக அரசாங்கம் பரிசீலனை செய்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதை எடுத்துக்கொள்ளலாமா என்பது பற்றி யோசனையில் இருக்கிறது.

Gold

* 504 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to exploit gold deposits in Rasipuram taluk, Salem district?

THE HON. SRI R. VENKATARAMAN : It is proposed to request the Geological Survey of India to include this item for investigation in their Field Programme for 1961–62. This Government also propose to take up detailed investigation of the area as soon as adequate staff is secured.

[2nd March 1961

SRI N. K. PALANISAMI : ஏற்கனவே இது சர்வே செய்யப்பட்டதா? அப்படியானால் அதனுடைய முடிவு என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : ஜியாலாஜிகல் சர்வே செய்யப்படவில்லை. பரிட்சார்த்தமாக மணலை எடுத்துப் பரிசீலனை செய்திருக்கிறார்கள். அப்படிப் பரிசீலனை செய்ததில் மிகக் குறைவான தங்கம் தூளாகக் கிடைக்கிறது. ஜியோபிஸிகல் சர்வே செய்யவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

SRI A. VEDARATHNAM : எத்தனை சதவிகிதம் தங்கம் இருப்பதாக இதுவரை செய்த ஆராய்ச்சிமூலம் தெரியவருகிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த ஊர் கிராமத்தார்கள் சொன்னது என்னவென்றால், ஒருநாள் பூராவும் அரித்தால், அதிர்ஷ்டம் இருந்தால் 4 அணா தங்கம் கிடைக்குமென்று. இல்லாவிட்டால் அதுவும் இல்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : எந்த இடத்திலே பரிசீலனை செய்யப்பட்டது? எந்த இடத்திலே தங்கம் இருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் இதன் மூலமாக லாபம் சம்பாதிக்க விரும்புகிறாரோ, என்னமோ? (சிரிப்பு) அதை எல்லாம் இங்கே தெரிவிக்கமுடியாது.

Gypsum

* 505 *Q.*—SRI S. RAMALINGA PADAYACHI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா, அரியலூர் பகுதியில் கிடைக்கும் ஜிப்சம் கல்லைக்கொண்டு தொழிற்சாலை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

(இ) ஆமென்றால், அதன் விவரமென்ன?

(உ) இல்லையென்றால், காரணமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : ( ) No, Sir.

(இ) & (உ) Do not arise.

SRI S. RAMALINGA PADAYACHI : இந்த ஜிப்சத்தை பல மாவட்டங்களுக்கு அனுப்பி பல பொருள்கள் செய்து வருகிறார்கள். உடையார்பாளையம், பெரம்பலூர் தாலூக்காக்களில் என் இந்தத் தொழிலை ஏற்படுத்தக்கூடாது?